**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் - 2024**
**------------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடெனப்து உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்

### 1.5.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுமுயற்சிகளின் கொள்வனவின் அடிப்படையில் ஏற்படுகின்ற கடன்கொடுத்ததோர் மீதி உடன்படிக்கையின் பிரகாரம் 60 நாட்களுக்குள் தீர்த்து வைக்க வேண்டியிருந்த போதிலும் 60 நாட்களை விஞ்சிய ரூபா 1,662 மில்லியன் மீதி தீர்த்து வைக்கப்படவில்லை. | பொதுத் திறைசேரியிலிருந்து நிதி விடுவிக்கப்படுகின்ற அளவின் பிரகாரம் நிறுவனத்தின் தேவையின் அடிப்படையில் சரியாக நிதி முகாமைத்துவம் செய்யக்கூடிய ஆகக்கூடிய முறையில் உரிய கொடுப்பனவுகள் கூட்டு முயற்சிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு முடியுமான வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 3(2)(iii) | நாட்டின் ஆரம்ப அடிப்படை மருந்து தேவைகளை மேவுகை செய்கின்ற 05 உற்பத்தி தொழிற்சாலைகளை உருவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட லோட்டஸ் பாமா செயற்திட்டத்திற்காக முழுமையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் 2021 முதல் மீளாய்வாண்டு வரை பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஊழியர் சம்பளம் மற்றும் உரிய காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையே ரூபா 55.58 மில்லியன், ரூபா 322.41 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 377.99 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | மருந்து உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றமையினால் செயற்திட்ட முன்மொழியப்பட்ட ஆரம்ப சந்தர்ப்பத்தில் அங்கீகாரத்திற்காக நிதிசார் சாத்தியவள ஆய்வு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | இழப்பு நட்டப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்குரிய இழப்பு நட்டப் பதிவேட்டை பேணிச் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பந்தி | பதிற் கடமை மற்றும் தகுதி காண் நியமனங்களை உள்ளடக்கிய சகல நியமனங்களும், சம்பள அதிகரிப்பு மாற்றங்கள், ஊழியரை விலக்குதல், கேட்டு விலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல், மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் மரணமடைதல் தொடர்பான முழுமையான விபரங்கள் அந்தந்த | எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற சகல நியமனங்கள் தொடர்பாகவும் திணைக்களத் தலைவர் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை | தாபன விதிக் கோவையின் எற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்கப்படும். | |
| (இ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டம் | | | |
| (i) | 64(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் பதிவினைப் புதுப்பிக்க வேண்டிய 08 மருந்துகளுக்குரிய ஆவணங்கள் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு உரிய கால எல்லையில் சமர்ப்பிக்காமையின் காரணமாக அந்த மருந்துகளுக்கான பதிவினைப் புதுப்பிப்பதற்கு 107 நாட்களுக்கும் 219 நாட்களுக்கும் இடையிலான வீச்சிலான காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | இவ்வாறான தாமதங்களை தடுக்கும் வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 64(2) ஆம் பிரிவு | 07 மருந்துகளின் பதிவினைப் புதுப்பிப்பதற்காக உரிய கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் அந்த மருந்துகளுக்காக பதிவு புதுப்பித்தல் தாமதம் அடைந்திருந்தது. | இவ்வாறான தாமதங்களை தடுக்கும் வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 5.3 ஆம் பந்தி | 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் வரிக்குப் பின் இலாபம் ஆகக் குறைந்தது 30 சதவீதம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் 2023 ஆம் ஆண்டுக்குரிய வரிக்குப் பின் இலாபத்தில் 30 சதவீதத்திற்குரிய பங்கு ரூபா 455,566,592 ஆக | நிறுவனத்தில் தேவையான நிதியத்தை முகாமைத்துவம் செய்து ஆகக்கூடிய வகையில் திறைசேரிக்கு வழங்கக்கூடிய அளவை திரண்ட நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்த போதிலும் ரூபா 300,000,000 மாத்திரம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட பொதுமுயற்சிகளுக்கான நிர்வாகம் தொடர்பான வழிகாட்டி | | | |
| (i) | 2.6 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உயர் முகாமைத்துவ மட்டத்தில் அங்கத்தவருக்கு தகமைகள் பூர்த்தி செய்யப்பட்ட பணிப்பாளர் சபை செயலாளர் ஒருவர் இருக்க வேண்டியிருந்த போதிலும் தகைமையுடன் பணிப்பாளர் சபை செயலாளரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தப் பதவிக்குரிய ஆட்சேர்த்தல்களை மேற்கொள்வதற்குத் தேவையான மாதிரிகள் தயாரித்து கேள்வி கோருவதற்காக பெறுகைகள் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ii) | 3.2 ஆம் பந்தியின் இணைப்பு 01 இன் 2 ஆம் பகுதி (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் நிதி மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் மனித வளப் பிரிவின் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் நிதி மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்படவில்லை. | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக ஒவ்வொரு செயற்பாடுகளுக்கான நிதி மதிப்பீட்டைக் குறிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (iii) | 4.3 ஆம் பந்தி | ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒருதடவை வீதம் இடர் குழுக்கூட்டம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் இடர்குழுக் கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டதுடன் உரிய காலத்தில் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாதிருந்தமையால் இறுதிக் காலாண்டில் இடர்க்குழு கூடுவதற்கு முடியாதிருந்தது. | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் 6/97 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆவது பந்தி | பதிற் கடமைக் காலம் 03 மாதம் ஆகக் கூடிய எல்லையின் கீழ் ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும் பிரதிப் பொது முகாமையாளர் மருந்துப் பட்டோலை மற்றும் ஆராய்ச்சி பதவிகளுக்காக தொடர்ச்சியாக 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டு ரூபா 1,541,368 பதிற்கடமைப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் பிரதிப் பொது முகாமையாளர் மனிதவளம் மற்றும் பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் என்ற 02 பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | முறையே பிரதி பொது முகாமையாளர் மனிதவளம், பொருட் பதிவேடு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் அதற்காக தகைமை பெற்ற விண்ணப்பதாரரைத் தெரிவு செய்வதற்கு தற்போது இதுவரை முடியாதிருந்ததுடன் பிரதி பொது முகாமையாளர் நிதி பதவிக்காக 2025 மார்ச் 16 ஆந் திகதி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. | உரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் VI ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக முறையான பதிலீட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவ கற்கைப் பிரிவில் ஆலோசனையினைப் பெற்றுக் கொள்வதற்காக எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2015 மே 15 ஆம் திகதிய இலக்கம் மு.அ 01/2015/01 என்ற நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி (அ) மற்றும் 2023 மார்ச் 14 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் சிரேஸ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்) இன் கடிதம் | ஒழுங்குபடுத்தப்பட்ட ஆலோசனைகளுக்குப் புறம்பாக அமையப் படி மற்றும் கூட்டிணைந்த படிகளாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,689,108 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சில உத்தியோகத்தர்களிடமிருந்து இதுவரையில் தற்போது அறவிடுவதற்கு நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி உத்தியோகத்தர்கள் அமைச்சு செயலாளருக்கு முறைப்பாடு சமர்ப்பித்துள்ளனர். | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இந்த மோசடியான நிலைமை தொடர்பான தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 | ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகைத் திட்டமும் ஒவ்வொரு பெறுகைகளும் ஆரம்பத்தில் இருந்து முடிவடையும் வரையும் ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் படிமுறைகள் கால ஒழுங்கு முறையை விபரிக்கின்ற பெறுகைக் கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளுக்காக பெறுகைத் திட்டம் மற்றும் கால அட்டவணை தயாரிக்கப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2015 யூன் 04 ஆம் திகதிய BP/30/15 மற்றும் 2022 செப்தெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் BP/62/22 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானம் | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்காக செலுத்தப்படுகின்ற துவிச்சக்கர வண்டிக் கடன் ரூபா 20,000 முதல் ரூபா 75,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எழுத்துமூல அங்கீகாரம் கோரி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது டன் எதிர்காலத்தில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர் பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கிடையிலான பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய மருந்து உற்பத்தியாளர்களுக்கு இடையிலான கூட்டு முயற்சிக்கான உடன்படிக்கை | | | |
| (i) | 5.2.4 ஆம் பிரிவு | முதலீட்டாளர்களால் உடன்படிக்கை செய்து 03 மாதங்களுக்குள் தமது உற்பத்திக் கூடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் 07 முதலீட்டாளர்கள் தொடர்பாக உரிய தகவல்கள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுமுயற்சிகளில் ஈடுபட்ட முதலீட்டாளர்களில் உற்பத்திக்கூட நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக அவதானிக்கப்படுகின்றமை மற்றும் Green through நிறுவனத்தின் நிர்மாண நடவடிக்கைகள் | கூட்டு முயற்சிகளுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் எதிர்கால முதலீட்டாளர்களின் உற்பத்தி கூடங்களும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவதானிக்கப் படுகின்றது. | |
| (ii) | 3.16 ஆம் பிரிவு | மெடிகொம் கூட்டுமுயற்சியினால் 16 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எந்தவொரு மருந்தும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தேவையான மருந்துகளை உரிய பிரகாரம் வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் மெற்கொம் நிறுவனத்தின் வழங்கல் செயலாற்றல் மட்டம் மிகவும் கீழ் மட்டத்திற்கு உட்பட்டிருந்தமையினால் அவர்களின் மருந்துகள் கொள்வனவு செய்யப்படவில்லை. | கூட்டு முயற்சிகளுக்காக உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உடன்படிக்கையை மீறியமை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,156 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,518 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 638 மில்லியன் அதாவது 42 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டில் ரூபா 800.9 மில்லியன் ஆன அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 4.8 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்தமையும், ரூபா 132 மில்லியன் ஆன விற்பனைக் கழிவுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 78 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்ததன் காரணமாக விற்பனை மற்றும் விநியோக செலவினம் 90.72 சதவீதத்தினால் குறைவடைந்தமையும், அந்நியச் செலாவணி நட்டம் குறைவடைந்ததன் காரணமாக நிதிச் செலவினம் 56.48 சதவீதத்தினால் குறைவடைந்தமையும் இந்த அதிகாரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தது.

### 2.2 விகிகதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 0.50 சதவீதத்தாலும், 3.52 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டில் 16 சதவீதமான கடன்பட்டோர் புரள்வு விகிதம் மீளாய்வாண்டில் 17 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் கடன் அறவிடல் காலம் 01 நாளினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 முதல் இது வரை நிர்மாணிக்கப்படாத நான்கு மாடி நிர்வாக கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 27,550,136 நடைமுறை வேலைக் | நடைமுறை வேலை கணக்கில் உள்ளடக்கப்பட்ட நிருவாக கட்டிடத்திற்காக இதுவரையில் ரூபா | நான்கு மாடி கட்டிட நிர்மாணம் மற்றும் தொடர்புடைய முன்னைய |

| | | |
|---|---|---|
| கணக்கில் ரூபா 73,582,498 மீதியில் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டதுடன் அது சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | 27,550,136 செலவிடப்பட்டுள்ளதுடன் இந்த நிருவாகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக இது உயர் முகாமைத்துவத்தின் மூலம் குறித்துரைத்த தீர்மானம் எடுக்காமையினால் எதிர் காலத்தில் நிர்வாக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் இட நெருக்கடிகள் ஏற்பட்டதுடன் நிர்வாக கட்டிடம் நடைமுறை வேலைக் கணக்கில் பேணிச் செல்லப்படுகின்றது. | செயற்பாடுகள் தொடர்பான முறையான விசாரணை மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 முதல் 2024 ஆம் ஆண்டு வரை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள கூட்டுமுயற்சி மருந்துகளுக்குரிய பட்டியல்களுக்காக மருந்து விலை முரண்கள் மற்றும் வழங்கல் தாமதக் கட்டணமாக ரூபா 1,106,420,551 மருத்துவ வழங்கல் பிரிவினால் கூட்டுத்தாபன்திலிருந்து அறவிடப்பட்ட போதிலும் அந்த தொகையை கூட்டுமுயற்சிகளில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலமாக கூட்டுத்தாபனத்தின் வியாபாரக் கடன்பட்டோர் மருத்துவ வழங்கல் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதற்கு அடிப்படைக் காரணமாக கடந்த சில வருடங்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் இதுவரையிலும் தீர்க்க முடியாதிருந்தமை காரணமாகும். உதாரணமாக 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 19 பில்லியன் அளவில் பட்டியல் அளவொன்றும் தொடர்ந்தும் தீர்த்து வைப்பதற்கு இருந்ததுடன் அது தீர்த்ததுவைக்காமையின் அடிப்படையில் பரீட்சிக்கப்படாமல் அறவிடுதல் வசதியினமாக இருந்தது. எனினும் இதுவரையில் உள்ள உரிய அறவிடல்களின் அளவு குறிப்பிடப்பட்டு எழுதி அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே 2024 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் 96 சதவீதமும் தீர்க்கப்பட்டுள்ளது. | மருத்துவ வழங்கல் பிரிவிற்கும் கூட்டுத்தாபனத் தின் தகவல்களுக்கும் இடையே முறையான இணக்க செயற்பா டொன்றுக்காக தேவையான கட்டுப்பாட்டு திட்டமொன்று அறிமுகப்படுத்த வேண்டி யிருந்ததுடன் இதுவரையில் தீர்க்கப்படாத உரிய கூட்டு முயற்சிகளில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கிரயம் ரூபா 119,158,776 ஆன 135 விடயங்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வின் போது பௌதீக ரீதியில் காணப்படாத நிலையான சொத்துக்கள் அநேகமானவை காணப்படாதிருந்ததை மீண்டும் பரீட்சிப்பிற்கு உட்படுத்த வேண்டி ஏற்பட்டதுடன் சில வேளைகளில் நிலையான சொத்துக்கள் இலக்கம் கழன்று சென்றமை | இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்கு முன் மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கைவிடல்கள் தவறுகள் இல்லாமல் சகல சொத்துக்களும் பௌதீக மெய்மை ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் நிலையான சொத்துக்கள் உரியவாறு மாற்றல்கள் நாளதுவரையாக்கப்படாமையினால் ஏற்பட்ட தவறாக இருந்தது. சொத்துக்களை இனங்காணும் இலக்கம் கழன்று சென்றதாக புதிய திட்டமுறைமையொன்றைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்படுவது டன் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (இ) | மருந்து மூலப்பொருள் பரிமாற்ற முறையின் கீழ் 2023 மார்ச் 03 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தில் இருந்து கூட்டுமுயற்சிகளுக்கு ரூபா 13,557,223 பெறுமதியான மூலப்பொருள் இருப்பு ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும்இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக உரிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதி அல்லது மருந்து மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது மருந்து மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்காக மீளாய்வாண்டில் 16 சந்தர்ப்பங்களின் போது பொது திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 25,780.89 மில்லியனுக்குரிய வழங்கல் பட்டியல்களுடன் இணக்கம் செய்து சரியாக இனங்காணாமல் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கான பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 25,780,890,000 வழங்கல் பட்டியல்களுக்கு உரிய பட்டியல்களை தீர்த்து வைத்தல் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்காக 96 சதவீத அளவிலான பட்டியல்கள் தீர்த்துவைத்தல் இனங்காணப்பட்டதுடன் மிகுதி சிறிய அளவு மாத்திரம் பட்டியல் தீர்த்துவைக்கப்பட வில்லை. 2023 ஆம் ஆண்டில் ரூபா 19,452,851,018 பட்டியல் மேலும் தீர்த்துவைக்க முடியாதிருந்ததுடன் அந்தப் பட்டியல்களைத் தீர்த்துவைப்பதற்கு தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் பிரிவுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | வழங்கல் பட்டியல்களுடன் இணக்கம் செய்து சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இணக்க செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்வதற்கு தேவையான முறையான பொறிமுறை யொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்ட மருந்துகள், | 08 மருந்துகளில் ஒரு மருந்திற்காக 2025 ஆம் ஆண்டின் போது தேசிய | பதிவினைப் புதுப்பிப்பதற்காக பின்பற்றப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சந்தையில் அதிக கேள்வியுடன் உள்ள 08 மருந்து வகைகள், வணிக ரீதியான உற்பத்தியாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கீகாரத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் உரிய பிரகாரம் சமர்ப்பிக்கப்படாமையினால் 1½ வருடங்களுக்கும் அதிமான காலத்தில் இருந்து அந்த வணிக ரீதியான உற்பத்திகளுக்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை. | ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. மிகுதி 07 மருந்துகளில் சிலவற்றைப் பதிவு செய்வதற்காக தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி மருந்துகளின் பதிவிற்காக தேவையான ஆவணங்கள் கூட்டுத்தாபனத்தால் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றது. | வேண்டிய செயற் பாடுகளைச் சரியாகவும் கால ரீதியிலும் பேணிச் செல்வதற்காக பொருத்த பொறி முறையொன்றை அறிமுகப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தாமதம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக் கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | Mebendazole Tab USP 100 mg மற்றும் Flucloxacillin Capsule BP 500 mg என்ற மருந்து வகைகளில் பதிவுச் சான்றிதழ் முறையே 2024 திசெம்பர் 16 மற்றும் 2024 திசெம்பர் 17 ஆம் திகதிகளில் காலாவதியாகி இருந்தமையும் கூட்டுத்தாபனத்தால் குறித்துரைத்த திகதிகளில் அந்த சான்றிதழ்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமையால் Flucloxacillin Capsule BP 500 mg முறையே 2025 சனவரி 29 ஆம் திகதி மற்றும் Mebendazole Tab USP 100 mg 2025 பெப்ரவரி 01 ஆந் திகதிகளில் மீண்டும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் பதிவினைப் புதுப்பிப்பித்தல் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கோரப்பட்ட போதும் உரிய மருந்துக் கட்டளைகளுக்காக மருந்து வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 26,177,276 ஆன மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | மருந்துகளின் பதிவு தாமதமடைந்தமையினால் 2024 திசம்பர் மாதத்தில் பெற்றுக்கொள்ளுவதற்கு முடியாதிருந்த கட்டளைகளின் அளவு 2025 சனவரி வரையில் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (எ) | Clopidogrel Tablets USP 75 mg (500 Pack Size) மருந்து புதிய மருந்து ஒன்றாக கூட்டுத்தாபத்தில் உற்பத்தி செய்வதற்காக 2020 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த உற்பத்தி சூத்திரத்தில் காணப்படுகின்ற நலிவுகளின் காரணமாக உற்பத்தி தோல்வியடைந்திருந்தது. உற்பத்தி சூத்திரத்தை அபிவிருத்தி செய்து அந்த மருந்தை கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்து மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைகளுக்காக வழங்கப்பட்டிருக்குமாயின் 10 சதவீத இலாபத்தை அடைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும் கூட்டுத்தாபனம் அவ்வாறான நடவடிக்கை எடுக்காமல் கூட்டுமுயற்சி ஊடாக 06 சதவீத இலாபத்துடன் 1,700 பொதிகளை மாத்திரம் வழங்கியிருந்தது. | Clopidogrel Tablets USP 75 mg மருந்தின் சூத்திரத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உற்பத்தி சூத்திரத்தில் காணப்படுகின்ற நலிவுகளை அபிவிருத்தி செய்து மருந்து உற்பத்தியை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டின் போது பெனிசிலீன் வலையத்தை விரிவுபடுத்தல், மறுசீரமைப்பு மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கி உதவியின் கீழ் ரூபா 438,146,336 கிடைக்கப் பெற்றதுடன் கூட்டுத்தாபனமும் அதற்காக ரூபா 24,895,256 கிரயத்தை செலவிட்டிருந்தது. இதன் போது அதிவேக மாத்திரை நிரப்பும் இயந்திரம் மற்றும் ஏனைய மருந்து இயந்திர உபகரணங்களை பென்சிலீன் வலயத்திற்கு கொள்வனவு செய்வதன் மூலம் இயந்திரக் கூடத்தில் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கும், Co-Amoxiclav மாத்திரைகள் போன்ற புதிய உற்பத்திக்காக புதிய குறைந்த பிரதேசம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | பெனிசிலின் வலயத்தில் புதிய நுண்ணுயிர் வளர்ச்சிக்காக மேலும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதுடன் Co-Amoxiclav மருந்து உற்பத்தி செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றாமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது பென்சிலீன் வலயத்தில் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற பென்சிலீன் மாத்திரைகளில் ஐந்து வகைகளில் 261 மில்லியன் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 191 மில்லியன் மாத்திரைகள் மாத்திரம் உற்பத்தி செய்வதற்கு முடியுமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது 275 மில்லியன் மாத்திரைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பென்சிலீன் வலயத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும் கவனத்தில் கொள்ளக் கூடிய செயல் முன்னேற்றதைப் பெற்றுக் கொள்ளக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஐ) | மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்தின் பிரகாரம் Metformin BP 500 mg மருந்தில் 84 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் 9.28 மில்லியன் அலகுகள் மாத்திரம் உற்பத்தி செய்த தனியார் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்து கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்வதன் மூலம் 12 சதவீதம் இலாபம் உழைப்பதற்கு முடியுமாக இருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2024/SPM/N/R/P/00015 என்ற கட்டளையின் கீழ் கிடைக்கப் பெற்ற ரூபா 50 மில்லியன் கட்டளை சேன்டிஸ் எக்டிவ் கூட்டு முயற்சிக்கு வழங்கி 06 சதவீத இலாபம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. மேலும் 250 மில்லியன் மருந்து அலகுகளை வழங்குவதற்காக மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2024/SPM/N/R/P/00015 என்ற மருந்துக் கட்டளை கூட்டுத்தாபத்தின் கூட்டு முயற்சியான வெலோஜன் லங்கா கம்பனிக்கும் மற்றும் | 2024 ஆம் ஆண்டிற்குரிய தண்டப் பணம் அந்த நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரியான சாத்தியவள ஆய்வுடன் உற்பத்தித் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் மிகவும் நலன்வாய்ந்த மாற்றுவழித் திட்டத்தை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்டிஸ் அக்டிவ் கம்பனிக்கும் வழங்கப்பட்டதுடன் செலோஜன் லங்கா கம்பனி குறித்துரைத்த கால அட்டவணையில் மருந்துகளை வழங்காமையின் காரணமாக ரூபா 12,311,005 தண்டப்பணம் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. எனினும் உரிய தண்டப் பணத்தை செலோஜன் லங்கா கம்பனியில் இருந்து அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஒ) | மீளாய்வாண்டில் விற்பனைத் திட்டம், உற்பத்தித் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டங்களில் உயர்ந்த சந்தை கேள்வி உள்ள Rosuvastatin Tablets IP 10 mg மருந்து உற்பத்திக்கு, விற்பனை செய்வதற்கு மற்றும் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 21 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற ரூபா 12,991,560 கிரயமான 75 கிலோ கிராாம் மருந்து மூலப்பொருட்கள் 2024 யூன் மாதம் வரை உற்பத்திக்கு பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அந்த மூலப் பொருட்களின் தரத்தன்மை தொடர்பாக பரீட்சித்து அவை IP மாதிரிகளுடன் இணங்காது இருந்தமை கூட்டுத்தாபனத்தின் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அந்த பரிசோதனையும் ஒரு வருடத்திற்குப் பின்னர் அதாவது 2024 யூன் 24 அந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் உரிய இருப்புக்களை மீள அனுப்பி அதற்குப் பதிலாக வழங்குனரிடம் இருந்து தகுதியான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இருப்பை மீண்டும் மீளமைப்பதற்கு வழங்குநருடன் இணங்கியிருந்ததுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த செயற்பாடுகளின் இறுதிக் கட்டமாக வழங்குநரிடமிருந்து நாட்டில் சுங்க விடுவிப்பிற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கோரிக்கை, உற்பத்திக் கால அட்டவணை மற்றும் இயலுமான மருந்து உற்பத்திக்காக காணப்படுகின்ற தொழில்நுட்ப இயலுமை போன்ற விடயங்களை கவனத்திற் கொண்டு தயாரிக்கப்படுகின்ற விற்பனை, உற்பத்தி மற்றும் பெறுகை திட்டத்தின் பிரகாரம் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | Aspirin AR Tablets 75 mg மருந்தில் தொழில்நுட்ப வழு காணப்பட்ட போதும் அது | Aspirin AR Tablets 2022 செப்டெம்பர் மாதத்தில் 300kg உம், 2023 ஏப்ரல் மாதத்தில் | மருந்து மூலப்பொருட்கள் காலாவதியாவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,786,398 கிரயமான Aspirin AR மருந்து மூலப்பொருட்கள் 641 கிலோ கிராம் குறைவான பயன்பாட்டுடன் களஞ்சியத்தில் காணப்பட்டது. | 500kg உம் பெறுகை செய்யப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் Lot 03 உற்பத்தி செய்யப்பட்டதுடன் bulk pack காணப்படுகின்ற கோரிக்கை குறைவடைந்தமையால் blister pack மேற்கொள்ளப் படுகின்ற உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டி ருந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி Lot 2024 BP மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமையால் உற்பத்தி நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் அடிப்படையில் தற்போது எஞ்சியிருந்து aspirin மூலப்பொருள் மருந்து உற்பத்தியாளர்க ளுக்கு வழங்கும் இயலுமை தொடர்பாக கண்டறியப்படுகின்றது. | முன்னர் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டின் போது Covid-19 தொற்றுநோய்க்கு பயன்படுத்தும் எதிர்பார்ப்பில் கொள்வனவு செய்து 2025 மார்ச் 31 ஆந் திகதியில் காலாவதியாவதற்கு இருந்த ரூபா 6,698,610 கிரயமான Chloroquine Phosphate BP மூலப்பொருள் 600 கிலோ கிராம் மீளாய்வாண்டின் போதும் விளைவற்றுக் களஞ்சியத்தில் காணப்பட்டிருந்த போதும் அந்த மூலப்பொருட்களை வழங்குனருக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கோ அல்லது ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Chloroquine Phosphate BP 250 mg என்ற மருந்து கொவிட் - 19 தொற்று நோய்க்காகப் பயன்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப் பட்டதுடன் அதுவரையிலும் காணப்பட்ட மூலப்பொருள் இருப்பை பயன்படுத்தி மிகவும் குறைந்த காலத்தில் Chloroquine Phosphate BP 250 mg மாத்திரைகளில் ஐந்து மில்லியன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டின் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு மருத்து வழங்கல் பிரிவிற்கு வழங்க முடியுமாக இருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்ட முறையில் மருந்து பயன்படுத்தப்படாமையினால் அந்த மூலப் பொருள் இருப்பு எஞ்சியிருந்தது. | மூலப்பொருட்களை மீண்டும் பரீட்சித்து பயன்பாட்டிற்கு எடுப்ப தற்கோ அல்லது வழங்குநருக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கோ அல்லது ஏனைய தரப்பினருக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | 2018 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் புதிதாக 29 மருந்து வகைகள் மாத்திரம் அறிமுகப்படுத்த போதிலும் அதிக கேள்வி உள்ள சில மருந்துகள் தவிர புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மருந்துகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் | இந்தக் காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மருந்துகளுக்கிடையே சில மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைகளுக்காக மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டதுடன் தனியார் சந்தையில் இந்த மருந்துகளுக்காக கேள்வி காணப்படவில்லை. | மருத்துவ வழங்கல் பிரிவினைப் போன்று தனியார் துறைக்கும் கோரப்பட்டுள்ள புதிய மருந்து உற்பத்தி கலவையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதியளவான கவனம் செலுத்தாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கலவைக்காக அந்த அறிமுகப்படுத்தலின் மூலம் போதியளவான பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | Rosuvastatin Tablets 5mg, Sitagliptine Tablets 50mg, Loratadine Tablets 10mg, Cetirizine Tablets 10mg, Losartan Potassium Tablets BP 25 mg, Mefenamic acid Tablets BP 500 mg போன்ற மருந்துகளுக்காக தனியார் சந்தையின் கேள்வி blister உறைகளுக்காக இருந்ததுடன் தற்போது எங்களிடம் உள்ள blister உறைப் பொறி முறை இதற்காக போதியளவில் இல்லாதிருந்தமையால் அந்த விடயத்திற்காக காணப்படுகின்ற சந்தை கேள்விக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | |
| (கா) | சதுர அடி 18,439 பரப்பளவை உடைய கூட்டுத்தாபனத்திற்கு உரிய புளத்சிங்களவில் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டிடத்தில் 3,762 சதுர அடி அளவான தரைமாடி மாத்திரம் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 10,837 சதுர அடி பரப்பளவை உடைய ஏனைய 03 மாடிகளும் உச்ச பயன்பாடு இன்றி விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் கட்டிடத்தில் பொதுப் பரிசோதனை ஆய்வு கூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை ஸ்தாபிக்கும் நோக்கில் பெறப்பட்ட 30 கேட்போர் கூடக் கதிரைகள் மற்றும் 10 மண்டபக் கதிரைகள் என்பன 05 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அந்த பொருட்கள் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. | கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் கதிரைகள் அரசாங்கத்தின் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுகின்றது. இந்தக் கட்டிடம் தற்போது தற்காலிகமாக களஞ்சியமொன்றாக பயன்படுத்தப்படுகின்றது. | கட்டிடத்தைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடும் போது ஆகக்கூடிய நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | ரூபா 104,844,337 பெறுமதியான Amoxicillin (AA003) மருந்தின் மூலப்பொருள் 9000 கிலோ கிராம் 2024 மார்ச் 01 ஆந் திகதி நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி 4500 கிலோ கிராம் 2024 திசம்பர் 18 ஆம் திகதியில் 4500 கிலோ கிராம் ஆக 02 | களஞ்சியத்திற்காக செலுத்தப்பட்ட தொகையை வழங்குநரிடமிருந்தும் பிணைமுறிகளிலிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தரப் பரிசோதனை செயற்பாடுகளை முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் மேலதிக களஞ்சிய கிரயத்தைக் குறைப்பதற்காக |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்களின் போது அதற்கு பதிலாக ஏனைய இருப்புக்கள் மீண்டும் கிடைத்திருந்த போதிலும் இதுவரையும் நிராகரிக்கப்பட்ட இருப்புக்கள் உரிய களஞ்சியங்களில் வைக்கப்பட்டு அதற்காக மேலதிக களஞ்சிய கிரயமொன்று செய்யப்பட்டிருந்தது. | | நிராகரிக்கப்பட்ட இருப்புக்களை உடனடியாக வழங்குநருக்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து Tramadol Hydrochloride Capsule 50 mg மருந்தில் 7.5 மில்லியன் மாத்திரைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2023 செப்தெம்பர் 06 ஆந் திகதி 2024/SPM/N/R/P/00029 என்ற கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 சனவரி 06 மற்றும் 2024 மே 06 என்ற திகதிகளில் முறையே மருந்து மாத்திரைகள் 04 மில்லியன் மற்றும் 3.5 மில்லியன் வீதம் குறித்துரைத்த கால அட்டவணையில் வழங்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் உரிய கட்டளைகளுக்காக மருந்து மாத்திரைகள் 5.256 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தாமதமாகி மருந்துகள் வழங்கியதன் காரணமாக 5 பட்டியல்களுக்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ரூபா 1.298 மில்லியன் தாமதக் கட்டணமும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் கூட்டுத்தாபனத்தின் விற்பனைத் திட்டத்தின் பிரகாரம் மருந்து மருந்தில் 7.5 மில்லியன் அலகுகள் விற்பனை செய்வதன் மூலம் ரூபா 118.57 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்றை பெற்றுக்கொள்ள | தாமதமாகி வழங்கல்கள் மேற்கொள்வதன் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு தண்டப்பணம் செலுத்த வேண்டி ஏற்படுகின்றமையால் கூட்டுத்தாபனத்திற்கு பாதகமானதாக இருந்த போதும் கட்டளையைப் பெற்றுக்கொள்ளும் போது அவற்றை வழங்கல் கால அட்டவணை மாதாந்தம் மற்றும் நியாயமான அடிப்படையில் வழங்குமாறு மருத்து பிரிவிலிருந்து கோரப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் சகல பிரிவுகளினதும் ஒன்றிணைந்த பொறுப்பாக கருதி இந்த கட்டளைகள் உரிய கால அட்டவணையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த கால அட்டவணையில் மருந்துகளை வழங்குவதற்கு முடியுமான பிரகாரம் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு திட்டமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 60.175 மில்லியன் விற்பனை வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக உற்பத்தித் திட்டத்தின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி மருந்து அலகுகள் 4,020 மில்லியன் ஆக இருந்ததுடன் உள்ளபடியான உற்பத்தி அலகுகள் 3,146.54 மில்லியன் ஆனமையால் பாதகமான முரண் மருந்துகளின் அலகுகள் 874.3 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மருந்து அலகுகள் 381.08 மில்லியன் ஆல் மருந்து உற்பத்தி குறைவாகும். | 2024 ஆம் ஆண்டின் போது உலக வங்கி உதவியின் கீழ் பெனிசிலீன் பிரிவின் கட்டிடம் மற்றும் இயந்திரத்தைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக சில மாதாங்கள் மூடப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது உற்பத்தி பிரிவின் பயிற்சி ஊழியர்கள் 12 பேர் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். மூலப் பொருள் பற்றாக்குறை, தொழில்நுட்ப விடயங்கள் Levothyroxine Tablets 50 mcg இற்காக கிடைக்கப்பெற்ற கட்டளை நிறைவடைந் திருந்தது. கேள்வி அதிகரித்த சில மருந்து வகைகள் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது மாத்திரைகள் 3,559.92 மில்லியன் கூட்டுத்தாபன வரலாற்றில் ஒரு வருடத்திற்கு உற்பத்தி செய்யப்பட்ட ஆகக் கூடிய மருந்து அளவாகும். 2018 ஆம் ஆண்டின் போது JICA உதவியின் கீழ் மருந்து கூடத்தை அபிவிருத்தி செய்யும் போது வருடாந்தம் உற்பத்தி இயலளவு 3200 மில்லியன் அளவாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br>அதனால் 4020 மில்லியன் என்ற தற்போது காணப்படுகின்ற நிலைமையின் கீழ் அடைந்து கொள்ளுதல் மிகவும் வசதியீனமான இலக்காக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலைமையை | அடைய கூடிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு திட்டம் தயாரித்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியுமான பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையாகக் கொண்டு இந்த இலக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது Paracetamol மருந்து Pacidol என்ற வியாபார பெயரின் கீழ் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அந்த மருந்தில் மீளாய்வாண்டில் 720,000 பொதி அலகுகள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 178,200,000 உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மருந்து பட்டோலை தேவையற்ற உயர்ந்த சந்தை கோரிக்கை காணப்படுகின்ற இந்த மருந்தின் வியாபாரப் பெயரை மேம்படுத்துவதற்காகவும் மேம்படுத்தல் செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் உற்பத்தி மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட அளவு Pacidol பொதியிடல் 114,150 அலகுகளாக இருந்ததுடன் அதில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 30,513,176 மாத்திரம் ஆக இருந்தது. | SPMC Pacidol விடயத்திற்காக சந்தையில் காணப்படுகின்ற கேள்வியின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டிற்காக விற்பனை செய்வதற்கு உறையிடப்பட்ட 720,000 அலகுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது, Pacidol விடயம் Blister உறையிடப்படுகின்ற இயந்திரத்தின் இன்னும் 08 விடயங்கள் மாத்திரம் உறையிடப்படுகின் றமையினால் 2024 ஆம் ஆண்டில் Pacidol விடயத்தில் உறையிடப்பட்டு சந்தையில் விற்பனை செய்வதற்காக 114,150 பொதியிடல் அலகே கிடைத்திருந்தது. அந்த மொத்த அளவும் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டதுடன் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக SPMC உற்பத்திக் கலவையில் உள்ள OTC மருந்தான Pacidol மருந்தின் பெயர் அநேகமாக பயன்படுத்தப்படுவதுடன் அதனுடன் Pacidol மேம்படுத்துகாக இல்லாதிருந்ததுடன் SPMC பெயர் (Image) மேம்படுத்துதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு நிறுவனத்தின் சகல பிரிவுகளையும் தொடர்ச்சியான பங்களிப்பு வழங்க வேண்டி யிருந்த போதிலும் திணைக்கள ரீதியில் 16 சதவீதம் ஆன மிகவும் குறைந்த சதவீதம் மாத்திரம் நிறுவனம் கைப்பெற்றி இருந்தமை போதியளவில் இல்லாதிருந்ததுடன் சகல தடவைகளிலும் சந்தையின் கேள்வியின் அடிப்படையில் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்குதல் தொடர்பாக நிறுவனத்தின் பிரிவுகள் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | Ciprofloxacin Tablets USP 500 mg மருந்தில் 2024 சனவரி முதல் ஒக்தோபர் வரை உள்நாட்டு சந்தை விநியோகிப்பாளர்களினால் மருந்து அலகுகள் 32.81 மில்லியன் கோரப்பட்டிருந்த போதிலும் மருந்து அலகுகள் 2.36 மில்லியன் ஆன மிகவும் குறைந்த அளவு வழங்கப்பட்டிருந்தது. | மூலப்பொருள் 2025 இன் முதல் இரண்டு மாதங்களில் பயன்படுத்தி Ciprofloxacin Tablets USP 250mg இல் 7.5 மில்லியன் மற்றும் 500mg இல் 3.6 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இந்த மருந்துகளை உற்பத்தி செய்தல் தொழில்நுட்ப ரீதியில் மிகவும் சிக்கலாக | தனியார் சந்தையினைப் போன்று மருத்துவ வழங்கல் பிரிவிலும் கேள்யுள்ள மருந்துகளாக இருந்தமையால் மருந்து உற்பத்தியை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் விற்பனைத் திட்டத்தின் பிரகாரம் அந்த மருந்துகளில் முறையே 13.5 மில்லியன் மற்றும் 13.2 மில்லியன் ஆக விற்பனை செய்வதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எந்த ஒரு அலகும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உள்நாட்டு சந்தையில் ஆகக் கூடிய கேள்வி உள்ள Ciprofloxacin Tab USP 250 mg மற்றும் 500 mg மருந்தை உற்பத்தி செய்வதற்கு Ciprofloxacin HCL USP மருந்து மூலப் பொருட்கள் அதிக அளவில் களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும் உரிய காலத்தில் உற்பத்தி செய்வதற்கு முடியாமையினால் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு இருந்த ஆகக் கூடிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இருந்ததுடன் இந்த இலக்கிற்காக அனுபவம் உள்ள ஊழியர்கள் சிலர் மாத்திரமே பங்குபற்றி இருந்தனர். அவ்வாறு இல்லையாயின் இந்த மருந்து இயந்திரம் உடைந்து சென்றமை போன்ற காரணத்தினால் உற்பத்தி நடவடிக்கையாளர்களுக்காக அதிக காலம், ஊழியம் செவாகின்றது டன் மீள் உற்பத்தி சம்பவங்களும் அதிகரித்திருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது 12 பயிற்சி ஊழியர்கள் நீங்கிச் சென்றமையினால் ஏற்பட்ட வெற்றிடயங்களின் காரணமாக எந்த மருந்திற்காக முன்னுரிமை வழங்குதல் போன்ற தீர்மானமும் எடுக்கவேண்டியிருந்தது. | வேண்டும். உரிய மனிதவளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தில் கூரை அமைத்தல் மற்றும் ஸ்தாபித்தல் பெறுகைகள் தொடர்பாக மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று ஸ்தாபிக்கப்படாது இருந்ததுடன் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைகளுக்குரிய அது சார்ந்த சகல செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்தக் கிரயம் மதிப்பீடு இல்லையாயின் பொறியியலாளர் மதிப்பீடு பெறுகை நிறுவனத்தால் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 4.3.2 ஆம் பிரிவின் | ஆரம்ப செயற்திட்டத்திற்கு மேலதிகமாக மேற் கொள்ளப்படுகின்ற உப செயற்திட்டங்களில் ஒரு விடயப் பராப்பாக கொண்டு செல்வதற்கு மீள நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் ஒவ்வொரு சேவை வழங்குநர்களாலும் நிறைவேற்றப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அந்த மொத்தக் கிரய மதிப்பீடு திணைக்கள பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதன் பிரகாரம் இதன் போது மாற்றமடைந்த சேவைகளுக்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரித்தல் குறுகிய காலத்தில் மேற்கொள்ளுதல் நடைமுறையில் வசதியான பணியாக இருக்கவில்லை. | |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1.1(இ) இன் பிரகாரம் பெறுகைகளுக்கு தேவையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டமைக்கான உறுதியான கடப்பாடு இன்றி பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்க முடியாதிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பெறுகைக்குத் தேவையான ரூபா 05 மில்லியன் நிதியில் ரூபா 03 மில்லியன் 2024 இன் வருடாந்த பாதீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் மிகுதி ரூபா 2 மில்லியன் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதியான 2024 பெப்ரவரி 02 ஆம் திகதி வரை நிதிப் பிரிவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப் பதனாக்கி முறைமை தற்போது காணப்படுகின்ற நவீன பிரிவினை உள்ளடக்கி முன்னர் ரூபா 35 மில்லியன் பெறுமதியான வளிப்பதனாக்கி முறைமையொன்று உள்ளதுடன் அது சகல தரப்பினரும் பரஸ்பர இணக்கப்பாடு மற்றும் புரிந்துணர்வின் அடிப்படையில் முழுமையாக இலவசமாக மேற்கொள்ளப்பட்ட நன்கொடையாகும். ஆரம்ப செயற்திட்டத்திற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படுகின்ற உப செயற்திட்டங்களில் ஒரு விடயப்பரப்பாகக் கொண்டு செல்லுதல் வசதியீனமான நடவடிக்கையாக இருந்ததுடன் ஒவ்வொரு சேவை வழங்குநர்களும் பல வகையில் இருந்தனர். அதன் பிரகாரம் இதன் போது மாற்றமடைந்த சேவைகளுக்காக மொத்த கிரய மதிப்பீடொன்றைத் தயாரித்தல் குறுகிய கால ரீதியில் மேற்கொள்ளுதல் வசதியீனமான பணியாக இருந்தது. | மேற்படி |
| (iii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் 5 சதவீத செயலாற்றல் காப்புறுதி ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி செய்வதற்கு மேலும் 28 நாட்கள் அதற்கு செல்லுபடியாகும் வகையில் ஒப்பந்தகாரரிடம் இருந்து பெறவேண்டியிருந்த போதிலும் செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | உப செயற்திட்டங்கள் அவசர நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றமையால் நிதி பற்றாக் குறைக்காக நிதிப் பிரிவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒப்பந்தம் கையளித்தலுக்கு இணையாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.12.2 ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய தகைமைகளை பரீட்சிப்பதன் கீழ் அதற்கு சமமான கடந்தகால செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கேள்விதாரரிடம் இருந்து பெறவேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல்கள் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களிடம் இருந்து பெறப்படாது இருந்ததுடன் அந்த தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியான 2022 திசெம்பர் 24 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கான வங்கிக் கணக்கு விபரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கையளித்தல் கடிதம் 2024 பெப்ரவரி 02 ஆந் திகதி அனுப்பப்பட்டதுடன் முழுமையான செயற்திட்டம் 2024 பெப்ரவரி 08 ஆந் திகதிக்கு முன் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால், இதனை மிகவும் அவசர நடவடிக்கையாக மேற் கொள்ளவேண்டியிருந்தமைய ாலும் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக்கொள்ளுதல் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் செயலாற்றல் பிணை முறியை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (v) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலை ஒப்பந்தங்களுக்காக பெறுகை நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு முறையான மீள் கையளித்தல் கடிதம் விநியோகிப்பதற்கும், கம்பனி முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றை இருதரப்பினாலும் கையொப்பம் இடவேண்டி இருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தால் ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது மிகவும் அவசர நடவடிக்கையாக மேற்கொள்ளப்படுகின்றமையி னால் முறையான ஒப்பந்த உடன்படிக்கை தயாரித்து கையொப்பம் இடுவதற்கு போதியளவான காலம் காணப்படவில்லை. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஒப்பந்த உடன்படிக்கையை தயாரித்து கையொப்பம் இடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஆ) | போக்குவரத்து வசதிகள் வழங்கும் பெறுகைத் திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான கையளித்தல் கழடிதம் விநியோகிக்க | எதிர்வரும் ஆண்டில் போக்குவரத்து கேள்வி வழங்குநர்களுக்கு கையளிக்கும் போது ஒப்பந்த உடன்படிக்கையில் | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்ததுடன் ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவை ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக போக்குவரத்திற்கான பங்களிப்பு மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து சேவை தொடர்பாக வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டி ருக்கவில்லை. | கைச்சாத்திடுவதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ii) | கேள்வி சமர்ப்பித்த 09 வழங்குநர்களில் அந்தந்த பிரயாணங்களுக்கான ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குநர்களைத் தெரிவு செய்து அந்த வழங்குநர்கள் வாகனத்தை பௌதீக ரீதியில் பரீட்சித்தல் 2024 ஆகஸ்ட் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் பங்குபற்றி இருக்காதிருந்ததுடன் அது போக்குவரத்திற்கு பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | நலிவுகள் மேற்படி இனங்காணப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களை பங்குபற்றச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3.5 கூட்டுமுயற்சி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி இலக்கம் MSD/SB11/SPMC/ORD/PO/2017 என்ற கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் கூட்டுமுயற்சிகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளை அந்த நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மருத்து வழங்கல் பிரிவிற்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் உரிய மருந்துகளின் ஆயுட்காலம் ஆகக் | கூட்டுமுயற்சி வியாபார உடன்படிக்கையின் பயன்பதரு ஆயுட்காலம் ஆகக்குறைந்தது 85 சதவீதம் மற்றும் 25 சதவீதம் ஆன நிருவாகக் கட்டணம் மற்றும் தண்டப்பணத்தை அறவிடல் தொடர்பாக கூட்டுமுயற்சி உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இதில் அடங்கியுள்ள விடயங்கள் உள்ளக சுற்றறிக்கையாக விநியோகித்து கூட்டு முயற்சியுடன் உடன்டிபக்கைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறைந்தது 85 சதவீதம் மாத்திரமாக அளவாகக் காணப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமுயற்சி உடன்படிக்கைகளில் 75 சதவீதமாக இருக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டமையால் மருந்து தரத்திற்குப் புறம்பான சந்தர்ப்பங்களின் போது அந்த மருந்திற்குரிய மொத்தப் பட்டியல் பெறுமதி மற்றும் அதில் 25 சதவீதமான மருந்துகள் உரிய பிரகாரம் அழிவடையச் செய்யும் நிர்வாகக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமுயற்சி உடன்படிக்கைகளில் அவ்வாறான நிபந்தனை உள்ளடக்கப்படாது இருந்தமையும், தாமதமாகி வழங்கப்படுமாயின் அதற்காக தண்டப்பணம் அறவிட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும் அது தொடர்பாக நிபந்தனைகள் கூட்டுமுயற்சி உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மாத்திரம் உரிய பொறுப்புக்கள் மற்றும் நட்டங்களை ஏற்க வேண்டி இருந்தது. | | |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனம் தற்போது பயன்படுத்துகின்ற குளிரூட்டி முறைமையில் போதியளவான தன்மை தொடர்பாக 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விரிவான வலுசக்தி கணக்காய்வின் பரிந்துரையின் படி தயாரிக்கப்பட்ட குளிரூட்டி கேள்வி தேவையினை பூர்த்தி செய்யும் செயற்திறன் குளிரூட்டி முறைமை ஸ்தாபிக்கும் முன்மொழிவிற்கு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய குளிரூட்டல் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் தொழில்நுட்ப மற்றும் நிதி கேள்வி கோரப்பட்டுள்ளது. தொழில்நுட்ப கேள்வி மற்றும் நிதி கேள்வி 2025 ஏப்ரல் 23 ஆம் திகதி திறக்கப் பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடுகள் மேற்கொண்டு கேள்வியினை கையளிப்பதற்காக பெறுகைக் குழுவிற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அசாதாரண தாமதம் தொடர்பாக பரீட்சித்து விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உத்தேசிக்கப்பட்ட லோட்டஸ் பாமா புதிய உற்பத்திக் கூடம் நாட்டில் அடிப்படை மருந்துத் தேவைகளை மேவுகை செய்கின்ற உற்பத்தி தொழிற்சாலைகள் 05 ஐ ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 03 வருடங்களுக்கு பின்னர் அதில் முதலாவது கட்டமாக முன்னுரிமை வழியினைப் பெற்று பொதுவான மருந்து உற்பத்திகளுக்கான தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 13.1 மில்லியனுக்கு சமமான ரூபா 4,349.2 மில்லியன் செலவினம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஒக்தோபர் 20 ஆந் திகதிய இலக்கம் BP/44/22 என்ற பணிப்பாளர் சபைப் பத்திரம் மற்றும் ஒக்தோபர் 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட 03 உற்பத்திக் கூடங்களை நிர்மாணிப்பதற்கு 20 ஏக்கர் பரப்பளவு போதியளவாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் ரூபா 322.4 மில்லியன் செலவில் 65 ஏக்கர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2024 பெப்ரவரி 02 ஆந் திகதி கூடிய அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவினால் செயற்திட்டத்திற்குரிய ஒவ்வொரு துறைகளைகளையும் மேவுகை செய்யும் வகையில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 முதல் 2026 வரையான ஐந்து வருட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் 03 வருடங்களில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 மே 27 வரையிலும் 03 வருடங்களும் 05 மாதங்களும் கடந்திருந்த போதிலும் பௌதீக செயல்முன்னேற்றம் பூச்சியமாகக் காணப்பட்டது. | சகல விடயங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். சாத்தியவள ஆய்வை மேற் கொள்வதற்கு அமைச்சின் ஆலோசனைக் குழுவின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை மற்றும் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு அறிக்கை தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2025 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 449 ஆக இருந்ததுடன், உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 334 ஆனமையால் வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை 115 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மனிதவளம் மற்றும் நிதிப் பிரிவுகளில் பிரதான 02 பதவிகளை உள்ளடக்கிய 10 பதவிகளும், நிறைவேற்று அல்லாத தரத்தில் 82 பதவிகளும் மற்றும் சிற்றூழியர் பதவியில் 23 வெற்றிடங்களும் காணப்பட்டது. | பந்தியுடன் இணங்குகின்றோம். | அத்தியவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2013 மார்ச் 28 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரிக்கப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மாற்றப்பட்டு அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்கள் மற்றும் புதிய பதவிகளை உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் ஒரே தொகுதிகளுக்குரிய பதவிகளுக்காக பல்வேறு தகைமைகளின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு இதன் கீழ் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக பழைய ஆட்சேர்த்தல் நடைமுறை அமுல்படுத்தப்படுவதுடன் 2013 இன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆட்சேர்த்தல் நடைமுறை புதிய மாதிரிகளின் பிரகாரம் அங்கீகரித்தல் வேண்டும். அதன் பிரகாரம் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியினதும் கீழ் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் தகைமைகள் குறிப்பிடப் பட்டு அதன் போது இடம்பெறுகின்ற நியாயமற்றவைகளை நீக்குவதற்கு அதிகாரத் தரப்பினர் தற்போது நடவடிக்கை எடுக்கின்றனர். | மனிதவள முகாமைத்துவத்தை முறைமைப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி முதல் 2024 திசெம்பர் 01 வரையான காலத்தில் 06 சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரதிப் பொது முகாமையாளர் (மருந்து பட்டோலை மற்றும் ஆராய்ச்சி பரிசோதனை) பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும் தகைமையுள்ள உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | பிரதிப் பொது முகாமையாளர் - பொருட்பதிவேடு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக 06 சந்தர்ப்பங்களின் போது விண்ண்பபம் கோரப் பட்டிருந்தது. 05 சந்தர்ப்பங்களில் தகைமையுடன் உள்ள விண்ணப்பதாரர்கள் முன்வராதிருந்ததுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கா கவும் நேர்முகப் பரீட்சைப் நடாத்தப்பட்ட போதும் விண்ணப்பதாரர் நேர்முகப்பரீட்சைக்காக வருகைதரவில்லை. | தகைமையுள்ள உத்தியோகத்தர்களை விரைவாக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் நடைபெற்ற தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் பதவிகள் 02 இற்காக ஆட்சேர்க்கும் நேர்முகப் பரிட்சையில் இருந்து உள்ளக விண்ணப்பதாரராக ஒரு பதவிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு உரிய நேர்முகப் பரீட்சையின் போது செயலாற்றல் தொடர்பாக 25 புள்ளிகள் வழங்கி ஏனைய உள்ளக விண்ணபதாரர்களுக்கு 05, 07 புள்ளிகள் ஆன குறைந்த புள்ளிகள் வழங்கியமை மற்றும் செயலாற்றல் தொடர்பான நேர்முகப் பரீட்சை சபையின் சகல அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து புள்ளி வழங்கியமை போன்ற விடயங்கள் காரணமாக அந்த நேர்முகப் பரீட்சை சபை இலக்கிடப்பட்ட விண்ணப்பதாரரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆட்சேர்த்தல் நடைமுறையில் குறிப்பிடப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் திட்டத்தின் பிரகாரம் புள்ளி வழங்கப்பட்டிருந்தது. சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதிநிதிகளின் கருத்துரையின் பிரகாரம் ஏனைய சகல அங்கத்தவர்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் புள்ளி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பங்கச்சார்பின்றி சுயாதீன மாகவும் வெளிப்படையாகவும் வெளிவாகின்ற வகையில் நேர்முகப் பரீட்சை சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர் பதவிக்காக கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற பழைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் (SOR) பகுப்பாய்வு இரசாயன நிபுணர் அல்லது தர பாதுகாப்பு துறைகளுக்குரியது | முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு ஆட்சேர்த்தல் நடைமுறையில் திருத்தங்கள் தேவையற்று இருந்ததுடன் முகாமையாளர் - தர உறுதிப்படுத்தல் ஆக பதவியொன்று அங்கீகரித்து ஆட்சேர்த்தல் நடைமுறை | மனிதவள முகாமைத்துவத்தை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகக்குறைந்தது 03 வருடங்கள் பட்டப்பின் அனுபவம் பெற்றிருந்தமையை கவனத்திற்கொள்வதாக குறிப்பிடப் பட்டிருந்தது. ஆட்சேர்ப்பின் போது இந்த பிரிவு இரண்டினதும் திறன்கள் உள்ள ஒருவர் தெரிவு செய்ய வேண்டியிருந்தமை ஆட்சேர்ப்பு நடைமுறையில் உரிய பிரகாரம் திருத்த வேண்டியிருந்தமையும் நிறுவனத்தில் உரிய திருத்தங்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 48 செயற்பாடுகளில் 23 தொடர்பாக செயல் முன்னேற்றம் காண்பிக்கப்படாதிருந்தமையால் அவற்றின் செயல் முன்னேற்றம் தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ளும் போது உரிய செயற்பாடுகளில் குறித்துரைத்த தரத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயல் முன்னேற்றம் உரிய பிரகாரம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலங்களுக்குரியதாக தயாரிக்கப்பட் டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் வழங்கல் பிரிவு செய்தல் மற்றும் ஆகக் கூடிய பயன்பாட்டுடன் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதன் மூலம் வருடாந்த உற்பத்தி பூர்த்தி 05 சதவீதத்தால் அதிகரிக்கும் பிரதான நோக்கமாக குறிப்பிடப்பட்ட போதிலும் அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறி இருந்தது. | காணப்படுகின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி தற்போது காணப்படுகின்ற நலிவுகளை இனங்கண்டு 2025 ஆம் ஆண்டின் போது உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தேவையான செயற்பாட்டு செயற்திறன்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும். |
| (இ) | வணிக ரீதியான சாத்தியவள ஆய்வு உள்ள மருந்தொன்று மற்றும் அத்தியவசிய மருந்தொன்றை உள்ளடக்கும் வகையில் வருடமொன்றுக்கு 05 புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு கூட்டிணைந்த திட்டத்தில் நோக்கமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | அந்த நலிவுகளை இனங்கண்டு 2025 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மேற்படி |